**நாள்:** 15.09.2025

**O.S. No. 80/2023**

**பி.வா.சா.1**

**பெயர்: பழனிவேல் , த/பெ. காத்தராசு**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் அலிவலம் கிராமத்தில் உள்ளது. பிராதி நான் இரண்டு புல எண்கள் குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புல எண் 117/9A, மற்றும் 163A/14A ஆகும். மேற்படி புல எண்களில் எந்த வகைப்பாட்டில் உள்ளது என்றால் புல எண் 117/9A வயலாக உள்ளது. புல எண் 163A/14A திடலாக உள்ளது. மேற்படி 2 புல எண் சொத்துகளையும் நான் வெவ்வேறு நபர்களிடம் கிரயம் பெற்றேனா என்றால் இல்லை. மாரியப்ப பிள்ளை மகன் உமா சங்கர் என்பவரிடமிருந்து மேற்படி இரண்டு புல எண் சொத்துகளையும் கிரயம் பெற்றேன். மேற்படி எனக்கு சொந்தமான இரண்டு புல எண் சொத்துகளுக்கு அடுத்து 1,2 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்துகள் உள்ளது என்றால் சரியல்ல. இடையில் கைலாசநாதர் கோவில் குளத்திற்கு செல்லும் வாய்க்கால் அமைந்துள்ளது.

புல எண் 163A/14A நான்கெல்லை தெரியுமா என்றால் எனக்கு சொந்தமான புலஎண் 117/9A சொத்திற்கு தெற்கே, ஸ்ரீகைலாசநாதர் சுவாமி கோவில் குளத்திற்கு போகும் வாய்க்காலுக்கு வடக்கு கிழக்கு, மேற்கில் சோமசுந்தரம் மற்றும் ராணி ஆகியோரின் வீடு மற்றும் மனை. என்னுடைய பிராதிலோ முன்விசாரணையி நிரூபண வாக்குமூலத்திலோ தாவா சொத்திற்கு கிழக்கிலும் வடக்கிலும் வாய்க்கால் அமைந்துள்ளதாக நான் கூறவில்லை என்றால் சரியல்ல. புல எண் 163A/14A என்ன வகைப்பாட்டில் உள்ளது என நான் தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நான் எந்த தேதியில் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தில் அத்துமீறியது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 18.06.2023 ஆகும். மேற்படி காவல் நிலைய விசாரணையில் என் புகார் விசாரிக்கப்பட்டடு CSR வழங்கப்பட்டதா என்றால் புகார் விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிகள்

எழுதிகொடுத்துள்ளனர். அதன் பேரில் வேலியை பிரதிவாதிகளே சரிசெய்துள்ளனர். CSR எதுவும் வழங்கப்படவில்லை. மேற்படி காவல் நிலைய விசாரணை குறித்து நான் எனது பிராதிலோ என் முன்விசாரணை நிரூபண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்படி அறிவிப்புகளை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுகொண்டார்களா என்றால் 3,4 பிரதிவாதிகள் மட்டும் பெற்றுக்கொண்டார்கள். 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாத காரணத்தால் திருப்பப்பட்டுவிட்டது. 1,2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி திருப்பபட்டதற்காக அஞ்சல் உறையுடன் கூடிய ஒப்புதல் அட்டையை இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யபட்டவில்லை என்றால் சரிதான். அதற்கு என்ன காரணம் என்றால் தெரியவில்லை. நான் காவல் நிலையத்தில் மேற்படி புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் இந்த பிரதிவாதிகள் விசாரிக்கப்படவில்லை என்றாலும் 1,2 பிரதிவாதிகளுக்கு நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக பொய்யாக வழக்குமூலம் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

1,2 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்துகள் தாவா சொத்திற்கு அடுத்து அமைந்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரயம் பெற்றதற்கு பிறகு தான் பிரதிவாதிகள் பிரச்சனை செய்தார்கள். எதனால் பிரதிவாதிகள் பிரச்சனை செய்யதாக கூறுகிறேன் என்றால் நான் கிரயம் பெற்றுள்ள புலஎண் 163A/14A சொத்தில் அவர்களது இடம் இருந்ததாக சொல்லி வேலி வைக்க வந்தார்கள். பிரதிவாதிகள் எப்போது பிரச்சனை செய்ததாக நான் கூறுகிறேன் என்றால் 18.06.2023 அன்று பிரச்சனை செய்தார்கள். நான் சொத்து வாங்கியது 2018 ல் ஆகும்.

பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக சொல்லுவதற்கு பின் தாவா சொத்தை பொருத்து சர்வேயர் மூலம் அளவீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் நில அளவை செய்தார்கள். 1,2 பிரதிவாதிகள் சர்வேயர் மூலம் அளவீடு செய்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 1,2 பிரதிவாதிகள் அளவீடு செய்தது குறித்து நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனம் தொடர்பாக நான் இவ்வழக்கில் மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் சர்வேயர் மூலம் அளவீடு செய்ததற்கு பிறகு சர்வேயரிடம் ஆக்கிரமிப்பு தொடர்பாக கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். என்ன தெரிந்து

கொண்டேன் என்றால் 1,2 பிரதிவாதிகளுடைய சொத்து என் அனுபவ சொத்திற்குள் வருவதாக சொன்னார்கள். மேற்படி சர்வேயர் சொன்ன விவரத்தை என் பிராதிலோ முன் விசாரணை வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

1,2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் நான் வாங்கிய சொத்துக்கு நான்கெல்லை சரிசெய்யவேண்டி இந்த பிரதிவாதிகள் மீது தவறான வழக்குமூலம் சொல்லி வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருப்பதாலேயே நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி நான் இவ்வழக்கில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றாலும் எனக்கு வழக்கிடும் உரிமை இல்லை என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது இல்லை என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

(3,4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.09.15 07:05:32 +0530